
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1265

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

124

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




ஓவியம் : சிகரன்

## 'திரவிடியன் ரயில்வே வேண்டும்!'

தமிழ்நாட்டின் சமூகத் தளத்திலும் அரசியல் தளத்திலும் பல தலைகீழ் மாற்றங்களுக்கு வித்திட்ட ஒரு மாநாடு, 1944-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27-ஆம் தேதி, சேலத்தில் நடைபெற்ற 'தென்னிந்திய நலவுரிமைச் சங்க மாகாண மாநாடு'. அந்த மாநாட்டில்தான் அமைப்பின் பெயரை, 'திராவிடர் கழக'மாக மாற்றினார் பெரியார். அம்மாநாட்டிற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு, ராசிபுரத்தில் ஒரு மாநாடு நடைபெற்றது. 'திராவிடர் மாநாடு' என்று பெயரிட்டே அம்மாநாட்டை நடத்தினர்.

'ராசிபுரம் தாலுகா திராவிடர் மாநாடு' 22.08.1944 அன்று, அங்குள்ள ஓரியண்டல் திரையரங்கில், பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்றது. பேருந்து நிலையத்தில் இருந்து மாநாட்டுக் கொட்டகைக்குத் தலைவர்கள் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர். காலை 9.30 மணிக்கு மாநாடு தொடங்கியது. தொடக்கத்தில், ப.அ.சித்தப்பா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். "நீண்டகாலமாக எதிர்பார்த்துக் கடைசியில் இம்மாதம் 27-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நம்முடைய 'மாகாண மாநாடு', சேலத்தில் நடைபெறப்போகிறது. அங்கே பெரியார் அவர்களுடைய பின்பலமாக நின்று, அவர் காட்டும் வழி நடந்தால், 'திராவிட நாடு' நிச்சயம் பெறுவோம் என்று மகிழ்ச்சியோடு உறுதி கூறுகின்றேன்" என்றார் அவர்.

அதன்பிறகு, நாவலர் நெடுஞ்செழியன் கொடியேற்றி வைக்க, தந்தை பெரியார் மாநாட்டைத் திறந்துவைத்து சொற்பொழி வாற்றினார். அதனையடுத்து, அண்ணா தலைமை உரை நிகழ்த்தினார். பின்னர், மதிய உணவுக்குப் பிறகு மீண்டும் மாநாடு தொடங்கியதும், 'திராவிட நாடு' படத்தை ஏ.பி.ஜனார்த்தனன் திறந்துவைத்தார். பெரியார் படத்தை, சி.பி. சின்னராஜ் திறந்துவைத்தார். நாகம்மையார் படத்தை, மணியம்மையார் திறந்துவைத்தார். ஜின்னா அவர்களின் படத்தை நாவலர் நெடுஞ்செழியன் திறந்துவைத்தார்.

அதன்பிறகு, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. திராவிட நாட்டைத் தனி நாடாகப் பிரிக்க வேண்டும், 'எஸ்.ஐ.ஆர்.', 'எம்.எஸ்.எம்.' ரயில்வேக்களை இணைத்து, 'தி கிரேட் திரவிடியன் ரயில்வே' என்று பெயரிட வேண்டும், ஆரம்ப கல்வித் திட்டத்தைக் கட்டாயமாக்க வேண்டும், திராவிடர் நாட்டில் உள்ள நமது இயக்கச் சங்கங்களை, 'திராவிடர் கழக'மாக்க வேண்டும், பெரும்பாலான அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் பார்ப்பனர்களே இருப்பதால், பார்ப்பனரல்லாத மாணவர்களின் கல்வி நலன்களைக் கருத்தில் கொண்டு, பார்ப்பனரல்லாத தலைமை ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல முக்கியத் தீர்மானங்கள், இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

மேலும், பிரிட்டிஷ் அரசை காங்கிரஸ் எதிர்த்தபோதிலும், அரசுப் பதவிகள் அனைத்திலும் அன்றைக்கு காங்கிரஸ்காரர்களே அமர்ந்திருந்தனர். உலகப் போரில், அன்றைக்கு பிரிட்டிஷ் அரசுக்கு 'சுயமரியாதை இயக்கமும்' 'நீதிக்கட்சி'யும் ஆதரவாக இருந்தபோதிலும், சுயமரியாதை இயக்கத்தை பிரிட்டிஷ் அரசு புறக்கணித்தே வந்தது. இதைக் கண்டித்து, நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கத்தினர் பெற்ற கௌரவப் பட்டங்களைத் திருப்பியளிக்க வேண்டுமென்று, அடுத்து நடைபெறவிருந்த மாகாண மாநாட்டுக்குப் பரிந்துரைத்தும் ஒரு தீர்மானம் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

பின்னர், மாலையில் அதே பந்தலில், சோமசுந்தர கவுண்டர் தலைமையில், பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. பெரியார், அண்ணா, ஜனார்த்தனன், நாவலர் ஆகியோர், 'தொழிலாளர்கள் - விவசாயிகள் - நமது நிலை - கல்வி - திராவிட நாட்டுப்பிரிவினை' ஆகிய பல்வேறு விஷயங்கள் குறித்து, பொதுமக்களுக்கு விளக்கினர். இரவு 10.30 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

...கூட்டம் திரளும்

## துயரத்திலும் தொடர்ந்து பேசுவோம்!

'விடியல், வெளிச்சம்ங்கிறதே பிடிக்காதவர்களிடம் தமிழ்நாடு சிக்கியியுள்ளதாக தேவ் என்பவரின் முகநூல் பதிவு சொல்கிறது. அவரது பதிவிலிருந்து...

"இருள்சூழ் தமிழ்நாடுங்கிறது பவர்-கட் என்பதால் மட்டுமல்ல. வளர்ச்சியில் மிகப்பெரிய பின்னடைவு, ஊழல், லஞ்சம், 3-வயது குழந்தை முதல் 80 வயது மூதாட்டிகள் வரை வல்லுறவு, கூட்டுப் பாலியல் வன்முறை, பெண்களை ஆளும் கட்சியின் நிர்வாகிகளே சீரழிப்பதும், அதற்கு திருவைகுண்டம் எம்.எல்.ஏ. சரவணன் போன்றோரே துணைநிற்பது, கோயில் நிலத்தை உச்சத்தில் இருப்பவர்களே கொள்ளையடிப்பதும்.. இது நாடா அல்லது இருண்ட காடாங்கிற அளவுக்கு போயிட்டிருக்கு.

மின்வெட்டு என ஒரு பக்கம் தினந்தோறும் மக்கள் வீதிகளுக்கு வந்து போராடுகிறார்கள். அதே சமயத்தில், மின் கட்டணமும் மூன்று நான்கு மடங்கு உயர்ந்துள்ளது. தி.மு.க. ஆட்சிக்கு வந்திருந்தால், ரூ.8000 டோக்கன், மாதம் ரூ.2000 உரிமைத்தொகை வந்திருக்கும். அதன் வகையில் ரூ10000 மக்கள் இழந்திருக்காங்க.

ஒரு பக்கம் அவஸ்தை... இன்னொரு பக்கம் வருமானம் இழப்பு. இதற்குப் பிறகும் பொதுமக்கள் தூற்றாம இருப்பார்களா? தூற்றுவதால்தான், மீம்ஸ்கள், ரீல்ஸ்கள், வாதங்கள்னு எல்லாமே ரூட்ஸ் மாஃபியா செய்துகொண்டிருக்கிறது. இவற்றை கவனத்தில் கொண்டு சோர்ந்துபோகாமல் தொடர்ந்து பேச வேண்டும்" என்கிறது அவரது பதிவு. துயர் துடைக்க, தொடர்ந்து பேசத்தான் வேண்டும்.

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

124

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## சென்னையின் கதை!

1955-ஆம் ஆண்டு, மாத இதழாகத் தொடங்கப்பட்டு, பின்பு மாதமிருமுறையாக வெளிவந்த, 20-ஆம் நூற்றாண்டு முற்போக்கு இலக்கிய இதழ்களுள் ஒன்று, 'சரஸ்வதி'. இந்த இதழில், சென்னை பற்றி பிரபல எழுத்தாளர்கள் எழுதிய அனுபவக் கட்டுரைகளை ஆய்வாளர் பழ.அதியமான், 'சென்னைக்கு வந்தேன்' என்ற தலைப்பில் தொகுத்து நூலாக்கியுள்ளார். படிக்கப் படிக்க, சென்னை பற்றிய பலபல நினைவுகள் மறையாமல் மனத்தில் தோன்றி மறைகின்றன.

இந்தத் தொகுப்பில் வல்லிக்கண்ணன் தவிர்த்து, பெரும்பாலான எழுத்தாளர்கள் சென்னையைப் பற்றி ஏதோ ஒரு எதிர்மறை அனுபவத்தையே பதிவுசெய்கிறார்கள். புதுமைப்பித்தனின் 'பொன்னகரம்' சிறுகதைகூட சென்னை பற்றிய எதிர்மறை சித்திரிப்புதான்.




'வாடிவாசல்' எழுதிய சி.சு செல்லப்பா, "சென்னை இன்னும் எனக்கு ஒட்டவில்லை போலத்தான் உணருகிறேன்" என்கிறார். 'கல்லூரி படிக்கும் மாணவனாக சென்னைக்கு வந்து, எழுத்துலக மாணவனாகச் சென்னையில் இருக்கிறேன்' என்கிறார் 'ஜனசக்தி'யில் பல காலம் பணியாற்றிய கே.இராமநாதன்.

கரிசல் காட்டிலிருந்து, சென்னைக்கு வந்து, 'சாகித்திய அகாடமி விருது' பெற்ற எழுத்தாளர் கு.அழகிரிசாமி, 'சென்னை வாழ்க்கை என்பது, எனக்கு அவ்வளவாகத் திருப்தியளிக்கவில்லை' என்கிறார். "துறுதுறு என்று இருப்பவர்கள்தான் சென்னையில் வாழ முடியும்" என்று சொல்லிவிட்டு, 'சென்னைக்கு வந்ததில் எனக்கு லாபம்தான்' என்கிறார், பெரியாரின் வாழ்க்கை வரலாறான 'தமிழர் தலைவர்' நூலை எழுதிய சாமி சிதம்பரனார்.

> 21-ஆம் நூற்றாண்டின் சென்னையைப் பற்றி இன்னும் நிறையவே எழுதப்பட வேண்டும். 20-ஆம் நூற்றாண்டுச் சென்னை பற்றிய இத்தொகுப்பு அதற்கான அவசியத்தை உணர்த்துகிறது.

எழுத்தாளனாகச் சென்னைக்கு வந்து, பசியோடு சேர்த்து நயவஞ்சகம், மோசடி, அவமானம், ஏமாற்றம் முதலிய பல கீழ்மைகளையும், தான் அனுபவித்து ஊர் திரும்பிய கதையைச் சொல்கிறார், 'தேனீ' இலக்கிய இதழின் ஆசிரியர் எம்.வி. வெங்கட்ராமன்.

இரண்டாம் உலகப் போர் சூழலில், சென்னையிலிருந்து கும்பகோணம் சென்று மறைந்த உ.வே.சாமிநாதையரின் சென்னை குறித்த அனுபவம், சேலம் ராமசாமி அவர்களுடன் பழகிய தருணத்தை விவரிக்கும் அதே நேரத்தில், மாநிலக் கல்லூரி, காஸ்மோபாலிடன் கிளப் உள்ளிட்ட இடங்களையும் நினைவூட்டுகிறது.

கிராம வாழ்க்கையை விமர்சிக்கும் புதுமைப்பித்தனின் 'தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை' என்ற வானொலி உரை, கட்டுரை வடிவில் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. "உன்னிடம் குற்றங்கள் பல இருப்பினும், சென்னையே! உன்னிடம் நான் அன்பு செலுத்துகிறேன், நீ வாழ்க!" என்று சென்னை பற்றி வல்லிக்கண்ணனின் கூற்று 21-ம் நூற்றாண்டிலும், மிகக் கச்சிதமாகச் சென்னைக்குப் பொருந்திப்போகிறது.

'ஒரு நகரத்தின் மீது ஊடல் கொண்ட எழுத்தாளர்களால் எழுதப்பட்ட காதல் கடிதங்கள்' என இத்தொகுப்பில் இடம்பெற்ற கட்டுரைகளை மதிப்பிடலாம். 21-ஆம் நூற்றாண்டின் சென்னையைப் பற்றி இன்னும் நிறையவே எழுதப்பட வேண்டும். 20-ஆம் நூற்றாண்டுச் சென்னை பற்றிய இத்தொகுப்பு அதற்கான அவசியத்தை உணர்த்துகிறது.

...வாசிப்போம்.

# ஃப்ளாஷ்பேக்



## மறக்க முடியாத பிறந்தநாள்!



வி.எஸ்.ராமகிருஷ்ணன்

1998-ஆம் ஆண்டு, எனது பிறந்தநாளின் போது, அன்றைய இளைஞரணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். எனது விருப்பத்தை, அன்றைய செங்கல்பட்டு மாவட்டக் கழகச் செயலாளர், 'மதுராந்தகத்தார்' என்று அழைக்கப்பட்ட மறைந்த அண்ணன் ஆறுமுகம் அவர்களிடம் சொன்னபோது, அவர் மகிழ்ச்சியுடன் என்னை அழைத்துச் சென்று தளபதி அவர்களைக் காணவைத்தார். அந்த பிறந்தநாள் வாழ்த்து மறக்க முடியாதது. புகைப்படத்தை இன்று பார்க்கையிலும் மனம் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கும்.

- வி.எஸ்.ராமகிருஷ்ணன்,
கழக மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர்,
காஞ்சிபுரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# ம.லூருக

## நங்கவரம் போராட்டம்!

1957-ஆம் ஆண்டு நவம்பர் 15 அன்று, சென்னை பெத்தநாயக்கன்பேட்டையில், கழகத்தின் பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றினார் கலைஞர். 'தி.மு.கழகம் ஆதிதிராவிடர்களுக்கு என்ன செய்தது? எனச் சிலர் கேட்கிறார்' என்று அதற்கு விளக்கமளித்தார் கலைஞர். "நங்கவரம் போராட்டத்தில் ஈடுபட்டது யார்? அதனால், பலனடைந்தவர்கள் யார்? நங்கவரம் போராட்டத்தில் 100-க்கு 100 பேர் ஆதிதிராவிடர்கள்தான். அவர்கள்தான் பலனடைந்தனர்" என்று நீண்ட விளக்கம் அளித்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900